Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**
தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 027 · திங்கள் Monday · 27.04.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

# ஓய்வுக்காக குடும்பத்துடன் முதலமைச்சர் ஸ்டாலின் கொடைக்கானல் சென்றார்



திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலுக்கு ஓய்வெடுப்பதற்காக குடும்பத்தினருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை மதியம் (ஏப்.25) வந்தார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடந்து முடிந்துள்ள நிலையில், முதல்வர் ஸ்டாலின் குடும்பத்துடன் 5 நாட்கள் கொடைக்கானலில் ஓய்வெடுக்க திட்டமிட்டுள்ளார். இதன்படி, முதல்வர் ஸ்டாலின் சனிக்கிழமை (ஏப்.25) காலை சென்னையில் இருந்து தனி விமானத்தில் குடும்பத்துடன் புறப்பட்டு மதுரை வந்தார். அங்கிருந்து கார் மூலம் பகல் 2.30 மணிக்கு கொடைக்கானலுக்கு வந்தார். வழிநெடுகிலும் சாலையோரம் முதல்வரை வரவேற்க நின்றிருந்த தொண்டர்கள், பொதுமக்களுக்கு காரில் சென்ற முதல்வர் ஸ்டாலின் கையசைத்தபடி சென்றார். சில இடங்களில் அவரை வரவேற்க காத்திருந்த திமுக மற்றும் கூட்டணி கட்சியினரிடம் புத்தகங்களை அன்பளிப்பாக பெற்றார். கொடைக்கானல் பாம்பார்புரம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் அவர் ஓய்வெடுத்தார்.

விடுதியில் கட்சியினர் யாரும் அவரை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. முதல்வர் வருகையை முன்னிட்டு, கொடைக்கானலில் ஏராளமான போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏப்ரல் 29-ம் தேதி வரை ஓய்வெடுக்கும் முதல்வர் ஏப்ரல் 30-ம் தேதி மீண்டும் சென்னை திரும்ப உள்ளனர். எனவே, ஏப்ரல் 30 வரை கொடைக்கானல் மலைப்பகுதியில் ஆளில்லா விமானங்கள் (ட்ரோன் கேமரா) பறக்க தடை விதித்து மாவட்ட ஆட்சியர் சரவணன் உத்தரவிட்டுள்ளார். அதே சமயம், சுற்றுலா பயணிகளுக்கு எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. கடந்த 2021-ல் சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் 2024-ல் மக்களவை தேர்தல் முடிவடைந்ததும் ஸ்டாலின் தனது குடும்பத்துடன் கொடைக்கானல் வந்து தங்கி ஓய்வெடுத்தது குறிப்பிடத்தக்கது. இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு தற்போது மீண்டும் ஓய்வெடுக்க வந்துள்ளார்.

# “வாக்கு எண்ணிக்கையின்போது அதிமுக, கூட்டணிக் கட்சி முகவர்கள் கவனம்” பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவுரை



சென்னை: "வாக்கு எண்ணிக்கை முடியும்வரை மிகுந்த விழிப்புடனும், கவனத்துடனும் அயராது பணியாற்றிட வேண்டுகிறேன். தமிழக மக்களைக் காப்பதற்காக, தீயசக்தி திமுக மீண்டும் தலையெடுத்துவிடாமல் தடுத்து நிறுத்துவோம்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் பொதுத்தேர்தலில் ஏப்.23 அன்று தமிழ் நாட்டில் நல்லாட்சி மலர வேண்டும் என்பதற்காக, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் காலை 7 மணி முதல் மாலை வரை வரிசையில் நின்று, தமிழக வரலாற்றில் முன்எப்போதும் இல்லாத அளவில் மிக அதிகமான வாக்குப் பதிவை உறுதி செய்துள்ள தமிழக வாக்காளப்பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் திமுக அரசின் மீது மக்களுக்கு இருக்கின்ற வெறுப்பை நாம் கண்கூடாகக் கண்டோம். விரக்தியின் விளிம்பில் உள்ள திமுக-வினர், எப்படி புறவாசல் வழியாக ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற எண்ணத்தோடு, அதற்கான முயற்சிகளை இந்தத் தேர்தலிலும் எடுப்பதற்குத் தயாராக உள்ளனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஏப். 23 அன்று முடிந்துள்ள நிலையில், மே.4 அன்று வாக்கு எண்ணும் பணி நடைபெற உள்ளது. இதற்காக, அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் முகவர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் அனைவரும் மிகுந்த கவனத்துடனும், விழிப்புடனும் பணியாற்றி, வெற்றிக் கனியை சிந்தாமல், சிதறாமல் பெற்று கழகத்திற்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் சமர்ப்பிக்கும் வகையில், பின்வரும் முக்கிய அம்சங்களை நினைவில் கொண்டு பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாக்கு எண்ணிக்கையின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள்: வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான 4.5.2026 அன்று, கழகத்தின் சார்பிலும், கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் நியமிக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அனைவரும், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் வேட்பாளர்களுடைய அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒருமணி நேரம் முன்பாகவே, தேர்தல் நடத்தும் அலுவலரால் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அடையாள அட்டையுடன் வாக்கு எண்ணும் மையங்களுக்குச் செல்ல வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் காலதாமதமாக செல்லக்கூடாது.

வாக்கு எண்ணும் மையத்தில், வாக்கு எண்ணும் மேஜைகளுக்கு ஏற்றார்போல் முகவர்களை நாம் நியமித்திருக்கிறோம். அந்த முகவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நாற்காலிகளுக்குச் சென்று அமர்ந்துவிட வேண்டும். வாக்கு எண்ணும் மையத்திற்கு உள்ளே சென்றவர்கள், வாக்கு எண்ணிக்கை முடிவுற்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகின்ற வரையிலும், எக்காரணத்தைக் கொண்டும் வாக்கு எண்ணும் மையங்களில் இருந்து வெளியே வரக் கூடாது. மிகுந்த கவனத்தோடு வாக்கு எண்ணிக்கையை கண்காணிக்க வேண்டும்.

வாக்கு எண்ணிக்கை மையங்களில் அனைத்து ஏற்பாடுகளும் முறைப்படி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதி செய்திட வேண்டும்.

தபால் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்போது, மிகவும் கவனமுடன் கண்காணிக்க வேண்டும்.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் வைக்கப்பட்டுள்ள சீல் முறையாக உள்ளதா என்பதை உறுதி செய்திட வேண்டும்.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும், ஏற்கெனவே படிவம் 17C-ன்படி வாக்குப் பதிவு நாளன்று பதிவு செய்யப்பட்ட வாக்குகளும் சரியாக உள்ளதா என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், வாக்குப் பதிவு இயந்திரத்தில் உள்ள தேதியையும், நேரத்தையும் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

வாக்குப்பதிவு இயந்திரத்தின் சீல்களும், பதிவான வாக்குகளின் எண்ணிக்கையும் சரியாக இருந்தால் மட்டுமே, வாக்கு எண்ணிக்கையை தொடங்க அனுமதிக்க வேண்டும்.

ஒவ்வொரு சுற்றிலும் வாக்கு எண்ணிக்கையின் முடிவுகள் அறிவிக்கப்படும்போதும், நீங்கள் குறித்து வைத்திருக்கின்ற வாக்குகள், தேர்தல் நடத்தும் அலுவலரால் சரியாக அறிவிக்கப்படுகிறதா என்பதை கவனமுடன் பார்க்க வேண்டும்.

ஏதேனும் மாறுதல்கள் இருக்கின்றபட்சத்தில், வாக்கு எண்ணிக்கையை தொடராமல் தேர்தல் நடத்தும் அலுவலரிடத்திலே தெரியப்படுத்த வேண்டும். வாக்கு எண்ணிக்கை முகவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களை, வாக்கு எண்ணும் மையத்தின் பிரதான மேஜையின் முன்பு அமர்ந்திருக்கின்ற வேட்பாளரின் தலைமை முகவரிடத்திலே தெரியப்படுத்தி, அதை எழுத்துப்பூர்வமாக வேட்பாளரின் சார்பாக தேர்தல் நடத்தும் அலுவலரிடத்திலே கொடுத்து அதற்குண்டான ஒப்புகையை கட்டாயம் கேட்டுப் பெற வேண்டும். அதற்கான தீர்வு கிடைத்த பின்னர்தான், அடுத்த சுற்று வாக்கு எண்ணிக்கை நடைபெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் யாரேனும், மாற்றுக் கட்சியினருக்கு ஆதரவாகவும், முறைகேடாகவும் செயல்படுகிறார்களா என்பதை உன்னிப்பாகக் கண்காணித்து, குறைகள் இருப்பின் சம்பந்தப்பட்ட மேலதிகாரிக்கு உடனடியாக தகவல் தெரிவித்து உரிய தீர்வினை காண வேண்டும்.

திமுக-வினர் வதந்திகளைப் பரப்புவதிலும், தில்லுமுல்லு செய்வதிலும், வன்முறையில் ஈடுபடுவதிலும் மிகவும் கைதேர்ந்தவர்கள் என்பதை இந்த நாடே நன்கு அறியும். இதற்கு, கடந்த காலங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை உதாரணமாகச் சொல்லலாம். ஆகவே, வாக்கு எண்ணும் மையங்களில் திமுக-வினரால் தில்லுமுல்லு ஏதேனும் நடத்தப்படுகிறதா என்பதை மிகுந்த விழிப்போடு கண்காணித்து, முறைகேடுகள், துஷ்பிரயோகங்கள் ஏதேனும் நிகழ்ந்தால், அது சம்பந்தமாக மேலதிகாரிக்கு உடனடியாக தகவல் தெரிவித்து உரிய தீர்வு காண வேண்டும்.

வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அனைவரும் தங்களுக்கான வாக்கு எண்ணிக்கை மையங்களில், அனைத்து சுற்று வாக்கு எண்ணிக்கையும் நிறைவடைந்து முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் தான் அங்கிருந்து வெளியே வர வேண்டும்.

வேட்பாளர்கள் மற்றும் அவர்களுக்கென நியமிக்கப்பட்டு உள்ள chief agent-களும், தங்களுக்கான வாக்கு எண்ணும் மையங்களில், வாக்கு எண்ணும் பணி முறையாக நடைபெறுகின்றனவா என்பதை விழிப்போடு கண்காணிக்க வேண்டும்.

அதிமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்திடும் வகையிலும்,

மக்கள் தீர்ப்பு நிலைநாட்டப்படும் வகையிலும், அனைவரும் மிகவும் விழிப்புடன் பணியாற்றிட வேண்டும். இது, ஜனநாயகப் பயிர் தழைத்தோங்க நாம் அனைவரும் ஆற்ற வேண்டிய இன்றியமையாத கடமை என்பதை நினைவில் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழக மக்களைக் காப்பதற்காக, தீயசக்தி திமுக மீண்டும் தலையெடுத்துவிடாமல் தடுத்து நிறுத்துவோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# கோவை, ஈரோடு, சேலம், தருமபுரியில் ஏப்.30, மே 1ல் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை: தமிழகத்தில் கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில் ஏப்.30, மே 1 தேதிகளில் கனமழைபெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வடக்கு உள் கர்நாடகா முதல் குமரிக்கடல் வரை தெற்கு உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 900 மீட்டர் உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் நாளை (ஏப்.26) ஒரிரு இடங்களிலும், 27-ம் தேதி மேற்கூறிய இடங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களிலும் ஒரிரு இடங்களில லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். 28, 29 தேதிகளில் நீலகிரி, கோவை, திருப்பூர் மற்றும் தேனி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

30-ம் தேதி கோவை, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர் மாவட்டங்களில், மே 1-ம் தேதி மேற்கூறிய மாவட்டங்கள் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலும் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமானது முதல் கன மழையும், இதர தமிழக பகுதிகளில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.

தமிழகத்தின் உள் மாவட்டங்களில் நாளை முதல் 29-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும். கடலோர தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை குறைந்தபட்ச வெப்பநிலை 82 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

அச்சிறுப்பாக்கம் அருகே

# சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் இல்ல முதலாமாண்டு நினைவு மண்டபம் திறப்பு விழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அடுத்த பொற்பனங்கரனை ஊராட்சியில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சண்முகம் தந்தை முன்னாள் திமுக கிளை கழக செயலாளர் காளி அவர்களின் முதலாமாண்டு நினைவு நாளையொட்டி சுமார் 5 லட்சம் மதிப்பிட்டில் கட்டிமுடிக்கப்பட்ட படத்திறப்பு மற்றும் நினைவு மண்டபம் திறப்பு விழா அச்சிறுப்பாக்கம் அடுத்த.பொற்பனங்கரனை ஊராட்சியில் வழக்கறிஞர் சண்முகம் தலைமையில் புத்த பிக்கு கலந்துகொண்டுபௌத்த வழியில் மாலை அணிவித்து மெழுகுவர்த்தி ஏந்தி. ரிப்பன் வெட்டி மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட நினைவு மண்டபத்தை திறந்து வைத்தனர் இதில் விசிக மாவட்ட செயலாளர் வேலுமணி உள்ளிட்ட வழக்கறிஞர்கள் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.



ஈரோடு மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், மதிய நேரத்தில் அனல்காற்று வீசி, சிக்னல்களில் நிற்கும் இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், பன்னீர் செல்வம் பார்க், சூரம்பட்டி 4 ரோடு பகுதிகளில் வாகன ஓட்டிகளுக்கு வெயிலின் தாக்கத்தை சமாளிக்க பச்சை நிற பசுமை பந்தல் அமைக்க மாவட்ட ஆட்சியருக்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோவை ஆர்.எஸ்.புரத்தில் 125 ஆண்டுகால பாரம்பரியம் கொண்ட

# டிபாருமல் ஜூவல்லர்ஸின் பிரீமியம் நகை பிராண்டான எலவே டைமண்ட்ஸ் நிறுவனம் தனது முதல், ஃபிளாகூஷிப் ஷோரூமை திறந்துள்ளது



தமிழகத்தில் முதல் முறையாக,கோவை ஆர். எஸ்.புரத்தில் 125 ஆண்டுகால பாரம்பரியம் கொண்ட டிபாருமல் ஜுவல்லர்ஸின்பிரீமியம் நகை பிராண்டான எலிவே டைமண்ட்ஸ் நிறுவனம் தனது முதல், ஃபிளாகூஷிப் ஷோரூமை திறந்தது. இதனை

ஹெல்த் பேஸிக்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் ஸ்வாதி ரோஹித் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஷோரூமை திறந்து வைத்தார். தொடர்ந்து இந்த நிறுவனம் குறித்து நிறுவனத்தின் நிறுவனர் திரிஷங்க் குப்தா செய்தியாளர்களிடம் கூறியதாவது..

ஹைதராபாத் நிஜாம்களுக்கு கைவினை நகைகளை செய்து, 125 ஆண்டுகால அனுபவத்தை கொண்ட இந்த நிறுவனம், அதிநவீன புதிய தொழில்நுட்பத்தில் உருவாக்கப்படும் லேப்-கிரோன் வைரங்களைக் கொண்டு நவீன வடிவமைப்பு நகைகளை அறிமுகப்படுத்தி உள்ளது. ஹைதராபாத்தில் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் இந்த நிறுவனம், வைர நகைகளுக்கான உயர்ந்த ரகத்தை கோவையில், தங்களது நிறுவனத்தில் காட்சிபடுத்தியது.இங்கு உயர்தர சோலிடேர், கலர்டு ஸ்டோன், மினிமலிஸ்ட் மற்றும் பாரம்பரிய பொல்கி, விக்டோரியன் கலெக்ஷன்கள் கிடைக்கின்றதாக கூறினார். விற்பனை நிலையத்தைத் தாண்டி, இந்த கோவை ஷோரூம், வைர நகைகளின் தனித்துவத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் என்றார். மேலும் ஆடம்பரத்தையும் பாரம்பரியத்தையும் இணைக்கும் அனுபவ மையமாக இந்த ஷோரூம் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இத்திறப்புவிழா நிகழ்ச்சியில், எலிவா டைமண்ட்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பிரஜய் மங்கன்லால், சக்தி ஃபைனான்ஸ் சர்விஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஸ்ருதி பாலசுப்ரமணியம் மற்றும் சந்திர பிரகாஷ் பன்சால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல், 2026, ஈரோடு மாவட்டத்தில் 098. ஈரோடு (கிழக்கு), 099.ஈரோடு (மேற்கு),100. மொடக்குறிச்சி, 103. பெருந்துறை,104.பவானி, 105.அந்தியூர், 106.கோபிசெட்டிபாளையம் மற்றும் 107.பவானிசாகர் (தனி) ஆகிய 08 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு 23.04.2026 அன்று மொத்தம் உள்ள 2379 வாக்குச்சாவடிகளில் நடைபெற்றது. இதில் 90.10% வாக்குகள் பதிவாகியுள்ளன.

வாக்குப்பதிவு நிறைவடைந்த பிறகு, வாக்குப்பதிவு மேற்கொள்ளப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகள் ஆகியவை போட்டியிடும் வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட மத்தியப் பார்வையாளர்(கள்) முன்னிலையில் காணொலி காட்சிப் பதிவு செய்யப்பட்டு, இந்தியத் தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட இருப்பு மற்றும் பாதுகாப்பு நெறிமுறையின்படி, 098. ஈரோடு (கிழக்கு). 099. ஈரோடு (மேற்கு). 100. மொடக்குறிச்சி, 103. பெருந்துறை, 104.பவானி மற்றும் 105.அந்தியூர் ஆகிய தொகுதிகளுக்கு ஈரோடு அரசு பொறியியல் கல்லூரி (IRTT-யிலும், 106.கோபிசெட்டிபாளையம் மற்றும் 107. பவானிசாகர் (தனி) ஆகிய தொகுதிகளுக்கு கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் உள்ள இருப்பு காப்பறையில் வைக்கப்பட்டுள்ளது. காப்பறைக்கு ஆயுதம்தாங்கியஇரண்டு அடுக்கு பாதுகாப்புடன் (குறைந்தபட்சதம் ஒரு ஆயுதம் தாங்கிய பாதுகாப்புப் படைப் பிரிவு), 24x7 கண்காணிப்புக் கேமராவின் (CCTV) கீழ் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும், காப்பறையின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக தங்களின் பிரதிநிதிகளை நியமிப்பது குறித்தும், மேலும் அவர்களைப் பாதுகாப்பு வளையத்தின் உட்பகுதிக்கு வெளியே அனுமதிக்கப்படுவது குறித்தும் எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு பொறியியல் கல்லூரி (IRTT), ஈரோடு மற்றும் கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோபிசெட்டிபாளைம் ஆகிய இடங்களில் உள்ள காப்பறையின் கண்காணிப்புக் கேமரா (CCTV) மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வாக்கு எண்ணுகை நாளன்று, போட்டியிடும் வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் மத்தியப் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட பார்வையாளர்(கள்)முன்னிலையில் காணொலிப் பதிவின் கீழ் இந்த காப்பறை திறக்கப்படும்.

# பத்தாம் வகுப்பு சிபிஎஸ்இ பொதுத்தேர்வு

# ஈரோடு ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவர்கள் சாதனை பாராட்டு விழா



மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (CBSE) அண்மையில் வெளியிட்ட பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகளில், ஈரோடு ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவர்கள் வரலாறு காணாத சாதனையைப் படைத்துள்ளனர். இந்த மகத்தான வெற்றியைத் தொடர்ந்து, சாதனை படைத்த மாணவர்களுக்குப் பள்ளியில் பாராட்டு விழா நடைபெற்றது.

(இங்கே மேலே உள்ள புகைப்படம் இடம்பெறும்: தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்த மாணவ,மாணவியர்கள், தங்கள் கைகளில் வெற்றிக்கோப்பைகள் மற்றும் பசுமைச் செடிகளுடன், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகத்தினருடன் குழுவாகக் காட்சியளிக்கின்றனர்.)

சாதனைப் பட்டியல்:

இப்பள்ளியைச் சேர்ந்த பல மாணவர்கள் 490-க்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்று அசத்தியுள்ளனர். மாணவர் விதுன் ஸ்மேஷ் S.K (496/500) மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பிடித்தார். மாணவிகள் மிருதுளா.D மற்றும் மோனா வர்ஷிகா (துலா 494) மதிப்பெண்கள்பெற்று இரண்டாம் இடத்தைப் பகிர்ந்து கொண்டனர். ஹசினி ஸ்ரீ N (493), சரண்யா J (492), மற்றும் ஸ்ரீ பாஸ்கரன். P (490) ஆகியோர் மிகச்சிறந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர்.பாடவாரியாக 'நூற்றுக்கு நூறு' (Centums):

இம்முறை மாணவர்கள் பல்வேறு பாடங்களில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்களைக் குவித்துசாதனைபடைத்துள்ளனர். தகவல் தொழில்நுட்ப பாடத்தில் 18 மாணவர்கள், தமிழ் பாடத்தில் 09 மாணவர்கள், சமூக அறிவியல் பாடத்தில் 03 மாணவர்கள் என மொத்தம் 30 மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

வெற்றி விவரங்கள் ஒரு பார்வையில்:

490-க்கும் மேல்: 06 மாணவர்கள்,480-க்கும் மேல்: 31 மாணவர்கள்,400-க்கும் மேல்: 141 மாணவர்கள்

பசுமை பாராட்டு:

பாராட்டு விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சால்வை அணிவித்துக் கோப்பைகள் வழங்கப்பட்டன. மேலும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாணவர்களுக்குப் பசுமைக் கன்றுகள் வழங்கப்பட்டது விழாவின் சிறப்பம்சமாக அமைந்தது.

பள்ளி நிர்வாகம்,ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் மாணவர்களின் இந்தத் தொடர் முயற்சிக்கும், அர்ப்பணிப்புக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தனர். "சரியான திட்டமிடலும்,ஆசிரியர்களின் வழிகாட்டுதலும் மாணவர்களின் உழைப்பும் இணைந்ததால் இந்த வெற்றி சாத்தியமானது" எனப் பள்ளி முதல்வர் தெரிவித்தார்.



ஈரோடு மாவட்டத்தில் வாரந்தோறும் ஈரோடு ஆயுதப்படை வளாகத்தில், உடலையும் மனதையும் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ளவும், ஆயுதங்களை கையாளவும், குழு கூட்டுத் திறனை மேம்படுத்தவும் காவல்துறையின் கவாத்து பயிற்சி நடைபெறுகிறது. இதன்படி (ஏப்.25) அன்று மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் டி.வி.கிரண் சுருதி ஆய்வு மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து, வாராந்திர கவாத்து பயிற்சி நடைபெற்றது.

# 7 எம்.பிக்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்: மாநிலங்களவை தலைவருக்கு ஆம் ஆத்மி கடிதம்



ஆம் ஆத்மி கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கும், அந்தக் கட்சியின் மேல்சபை துணைத் தலைவர் ராகவ் சத்தாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு நிலவி வந்தது. இதனால் ஆம் ஆத்மி மேல்சபை எம்.பி.க்கள் குழு துணைத் தலைவர் பதவியில் இருந்து ராகவ் சத்தா சமீபத்தில் நீக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து கட்சி தலைமையின்மீது அவர்தொடர்ந்து குற்றச்சாட்டுகளை சுமத்தி வந்தார். இந்த நிலையில் ராகவ்சத்தா,சந்தீப்பாடக், அசோக் மித்தல், சுவாதி மாலிவால், ஹர்பஜன் சிங், ராஜேந்திர குப்தா, விக்ரம் ஷைனி ஆகிய 7 மேல்சபை எம்.பி.க்கள் ஆம் ஆத்மி கட்சியில் இருந்து திடீரென விலகினர். அவர்கள் பா.ஜ.க.வில் இணைகிறார்கள்.

மேல்சபையில் ஆம் ஆத்மி கட்சிக்கு 10 எம்.பி.க்கள் உள்ளனர். அதில் 3-ல் இரண்டு பங்கு எம்.பி.க்கள் கட்சியில் இருந்து விலகுவது தொடர்பான கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். கட்சியில் இருந்து விலகுவது தொடர்பான ஆவணத்தை மேல்சபை தலைவரிடம் அவர்கள் அளித்துள்ளனர். இந்த தகவலை ராகவ் சத்தா தெரிவித்தார்.7 மேல்சபை எம்.பி.க்களும் பா.ஜ.க.வில் இணைவதற்கான கடிதம் மேல்சபை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் அளிக்கப்பட்டது.

இதனிடையே, ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர் சஞ்சய் சிங் மாநிலங்களவை தலைவருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், கட்சியை விட்டு வெளியேறிய 7 எம்.பி.க்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்.கட்சித்தாவல் தடுப்பு சட்டம் தெளிவாகக் கூறுவது என்னவெனில், மாநிலங்களவை மற்றும் மக்களவையில் ஏற்படமுடியாது.எனவே, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருந்தாலும் கூட சட்ட ரீதியான அங்கீகாரம் எதுவும் கிடைக்காது" என்று தெரிவித்துள்ளார்.

# சாத்தான்குளம் கொலை வழக்கில் 9 பேர் தூக்கு தண்டனையை உறுதிப்படுத்த வழக்கு



மதுரை: சாத்தான்குளம் தந்தை, மகன் கொலையில் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உட்பட 9 பேருக்கும் விசாரணை நீதிமன்றம் விதித்த தூக்குத் தண்டனையை உறுதிப் படுத்தக் கோரிய வழக்கில், அனைவரும் பதிலளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சாத்தான்குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்த ஜெயராஜ், அவரது மகன் பென்னிக்ஸ் ஆகியோர், கரோனா ஊரடங்கு அமலில் இருந்த காலகட்டத்தில் 2020 ஜூன் 19-ல் போலீஸாரால் விசாரணைக்குஅழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக, சிபிஐ கொலை வழக்குப் பதிவு செய்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமைக் காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகிய 9 பேரை கைது செய்தனர்.

சிபிஐ மனுதாக்கல்

இந்த வழக்கை, மதுரை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் விசாரித்தது. விசாரணை முடிந்த நிலையில், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உள்பட 9 பேருக்கும் தூக்குத் தண்டன விதித்து, ஏப்ரல் 6-ம் தேதி நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்த தூக்குத் தண்டனையை உறுதி செய்யக்கோரி,தமிழகஅரசு மற்றும் சிபிஐ தரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை நீதிபதிகள் ஆனந்த் வெங்கடேஷ், ராம கிருஷ்ணன் அமர்வு விசாரித்தது. ஸ்ரீதர் உள்பட 9 பேரும் மதுரை மத்திய சிறையில் இருந்த நிலையில், காணொலி மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

அவர்களிடம் நீதிபதிகள், சாத்தான்குளம் வழக்கில் விசாரணை நீதி மன்றம் விதித்த தூக்குத்தண்டனையை உறுதிப்படுத்த சிபிஐ தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

அதற்கு ஸ்ரீதர் தரப்பு வழக்கறிஞர், வழக்கு தொடர்பான உரிய ஆவணங்களை சிபிஐ அளிக்கவில்லை எனக் கூறினார். பின்னர் நீதிபதிகள், உத்தரவு நகலை வைத்து முதலில் மேல்முறையீடு மனுத் தாக்கல் செய்யுங்கள் , அதன் பிறகு உரிய ஆவணங்கள் வழங்கப்படும்.மேலும், சிபிஐ தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனுவுக்கு பதிலளிக்க வேண்டும் என்று கூறி, விசாரணையை தள்ளிவைத்தனர்.

# பைக் மீது கார் மோதல்; சினிமா இயக்குனர் பலி மனைவி, மகன் படுகாயம்: சென்னையை சேர்ந்தவர்கள்

களக்காடு:

நெல்லைஅருகேபைக் மீது கார்மோதிய விபத்தில் பிரபல சினிமா இயக்குனர்பலியானார். அவரது மனைவி, மகன் ஆகியோர் படுகாயம் அடைந்தனர். தேர்தலில் வாக்களிப்பதற்காக சென்னையில் இருந்து சொந்த ஊர் வந்தபோது இந்த சோக சம்பவம் நடந்துள்ளது. நெல்லை மாவட்டம் திசையன்விளைஅருகே உள்ள மன்னார்புரத்தைச் சேர்ந்தவர் ஜெயபாலன் (45). இவர் திரைப்பட இயக்குனர். தற்போது பந்து படத்தை இயக்கி வந்தார். சென்னையில் இருந்து சொந்த ஊருக்கு ஒட்டு போடுவதற்காக கடந்த 22-ம் தேதி அதிகாலை புறப்பட்டார். பஸ்சில் இடம் கிடைக்கவில்லை. எனவே ஓட்டுப் போட வேண்டும் என்ற நோக்கத்தில் எப்படியாவது சொந்த ஊருக்கு கிளம்ப வேண்டும் என முடிவு செய்து மனைவி பேச்சியம்மாள் (35), 7 வயது சிறுவனுடன் சென்னையில் இருந்து பைக்ஒன்றில் 22-ம்தேதி அதிகாலை புறப்பட்டார். மனைவி சொந்த ஊர் ராதாபுரம் அருகே உள்ள கஸ்தூரிரெங்கபுரம். எனவே மனைவியை அங்கு சென்று விட்டுவிட்டு அங்கிருந்து நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி மன்னார்புரம் வர முடிவு செய்து இருந்தார். 23-ம்தேதி அதிகாலை நாங்குநேரி அடுத்து வாகைகுளம் ரோட்டில் வலது புறம் ஓரமாக பைக்கை நிறுத்திவிட்டு நின்று கொண்டு இருந்த வேளையில் எதிரே இருந்து வந்த கார் ஒன்று இவர்கள் மூன்று பேர் மீதும் எதிர்பாராதவிதமாக மோதியது. இதில் ஜெயபாலன், அவரது மனைவி மற்றும் சிறுவன் உள்ளிட்ட மூன்று பேரும் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தனர்.



# மயோனைஸ்க்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து தமிழ்நாடு அரசு உத்தரவு



சென்னை:பச்சை முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மயோனைஸ்க்கு விதிக்கப்பட்டிருக்கும் தடையை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து தமிழ்நாடு அரசு உத்தரவு அளித்துள்ளது. சால்மோனெல்லாடைபிமிரியம், சால்மோனெல்லா என்டிரிடிடிஸ், எஸ்கெரிச்சியா கோலி மற்றும் லிஸ்டீரியா மோனோசைட்டோஜென்ஸ் போன்ற தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களால் மாசுபடுவதால், தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரலில் இதற்கு தடை விதிக்கப்பட்டது.

குழந்தைகள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் அதிகம் விரும்பி உட்கொள்ளும் உணவுப் பொருளாகமயோனைஸ் இருந்து வருகிறது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம், ஷவர்மா போன்ற உணவுகளுடன் பரிமாறப்படும் மயோனைஸால் உணவு நச்சுத்தன்மை ஏற்படுவதாகப் புகார்கள் எழுந்தன. இதையடுத்து, பச்சை முட்டையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் மயோனைஸை உற்பத்தி செய்யவோ, சேமிக்கவோ அல்லது விற்பனை செய்யவோ ஒரு வருடம் தடை விதிக்கப்பட்டது.

அந்தத் தடையானது கடந்த ஏப்ரல் 8-ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில், தற்போது அதனைமேலும்ஓராண்டுக்கு நீட்டித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. 2026 ஏப்ரல் 8-ம் தேதி முதல் அடுத்த ஓராண்டு காலத்திற்கு இந்தத் தடை அமலில் இருக்கும்.பச்சைமுட்டை மூலம் மயோனைஸ் தயாரித்தல்,பதப்படுத்துதல், பேக்கேஜிங் செய்தல், சேமித்தல், போக்குவரத்து, விநியோகம் மற்றும் விற்பனை ஆகிய அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பச்சை முட்டையில் இருந்து தயாரிக்கப்படும் மயோனைஸில் சால்மோனெல்லா போன்ற பாக்டீரியாக்கள் எளிதில் உருவாக வாய்ப்புள்ளது. முறையான வெப்பநிலையில் சேமிக்கப்படாத போது, இது கடுமையான வயிற்றுப்போக்கு மற்றும் உடல்நலக் குறைபாடுகளை உண்டாக்கும் என்பதால், பொதுமக்களின் நலன் கருதி தடை விதிக்கப்பட்டுள்ளது.



மதுரை மாவட்டம் திருமங்கலம் நான்கு வழி சாலை கப்பலூர் சிக்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் தனியார் டயர் நிறுவனத்தில் ஊழியர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தார் அப்பொழுது இரண்டு தலை கொண்ட மண்ணுளிப் பாம்பு ஊர்ந்து கொண்டு இருந்ததை கண்ட ஊழியர்கள் உடனடியாக அங்குள்ள மேலாளிடம் தகவல் தெரிவிக்கவே வினோத் என்னும் ஊழியர் அதை பத்திரமாக பிடித்து சமூக ஆர்வலர் காளமேகம் தகவல் தெரிவிக்கவே அவர் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தார் அதன் அடிப்படையில் பசுமலை அருகே உள்ள வன அலுவலர்களிடம் இரண்டு தலை கொண்ட மண்ணுளிப் பாம்பு ஒப்படைக்கப்பட்டது

# மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் போதைப் பொருள் விளம்பரங்களில் பல கோடிகள் கொடுத்தும் நான் விளம்பரத்தில் நடிக்க மாட்டேன் என தவிர்த்துள்ளேன்

## நடிகர் ஜிவி பிரகாஷ் பேட்டி



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த இல்லலூர் பகுதியில் வொண்டர் லா சென்னை ஐந்தாவது கிளை கடந்த டிசம்பர் மாதம் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் காணொளி மூலம் திறந்து வைத்தார் இதில் 43வது முக்கிய விளையாட்டாக பார்க்கப்படும் ஆகாய ஊஞ்சல் திறப்பு விழா இன்று நடைபெற்றது என் நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக இசையமைப்பாளரும் திரைப்பட நடிகருமான ஜிவி பிரகாஷ்கலந்துகொண்டு ஆகாயஊஞ்சலைதிறந்து வைத்து உல்லாசமாக ரைடு சென்று மகிழ்ந்தார்,

பிறகு ஜி வி பிரகாஷ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறுகையில்

இந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் ஒருநாள் முழுவதும் மிகவும் மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழிக்க தி ஒண்டர்லா சென்னை மிகவும் பயனுள்ளதாக இருக்கும்

ஒண்டர்ல சென்னை பொழுதுபோக்கு தளத்தில் இதுவரை 42 சிறப்பு வாய்ந்த விளையாட்டுகள்இருந்த நிலையில் 43வது ஆக பொதுமக்களை அனைவரும் கவரும் வகையில் இந்த ஆகாய ஊஞ்சல் விளையாட்டு அமைந்துள்ளது 80 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது இந்த ஆகாய ஊஞ்சலில்பொதுமக்கள் பயன்படுத்தும் போது இந்த நகரத்தை சுற்றி பார்க்கும் ஒரு புதிய அனுபவத்தை உணர்வார்கள் எனவும்


ஒரு திரை பிரபலமாக இருந்தாலும் பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும்எந்தஒருவிளம்பரத்திலும் நடிக்க மாட்டேன் இதற்கு முன்னே என்னை போதைப்பொருட்கள் விளம்பரத்தில் நடிப்பதற்காக அழைத்தார்கள் பெரிய பெரிய கூல்ட்ரிங்ஸ் நிறுவனங்கள் விளம்பரங்களில் நடிப்பதற்காக அழைத்தார்கள் பல கோடிகள் கொடுத்தும் பொது மக்களுக்கு தீமை விளைவிக்கும் விளம்பரங்களில் நடிக்காமல் மறுத்தேன் இது குடும்பங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக பொழுதை கழிக்கும் இடம் என்பதனால் இந்த நிகழ்ச்சிக்கு வருகைதந்துள்ளேன்,

கடந்த மார்ச் மாதத்தில் நான் நடித்த படமும் நான் இசையமைத்தபடும் இரண்டுமே வெற்றி படங்களாக அமைந்தது எனவே மார்ச் மாதம் மிகவும் மன நிறைவான மாதமாக அமைந்தது,

நம் கையில் உள்ள சமூக வலைதளங்களால் பொதுமக்கள் நிறைய நபர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்க ஏதுவான ஒரு தளமாக அமைந்துள்ளது பொதுமக்களின் திறமைகளை அனைவரிடமே கொண்டு சேர்க்கும் தலமாக தற்போது சமூகவலைதளங்கள் பயன்பெறுகின்றன,

உங்களைப் போல் நானும் ஒட்டு போட்டு இருக்கேன் இந்த முறை தேர்தல் முடிவு இப்படித்தான் இருக்கும் அப்படித்தான் இருக்கும் என்ற கணிப்பெல்லாம் இருந்தாலும் எப்படி அமையப்போவது என்பது யாருக்கும் தெரியாது சில நேரங்களில் நமக்கு அதிர்ச்சி அளிக்கும் நிகழ்வு கூட நடக்கலாம் எதுவாக இருந்தாலும் மே 4ம் தேதி என்று தான் நமக்கு முடிவு தெரிய போகிறது. எனக்கு கூறினார்,

# வாக்கு எண்ணிக்கை மைய கேமராவில் தவறான நேரம் காட்டுவதால் சர்ச்சை: திருப்பூரில் பரபரப்பு



திருப்பூர்: வாக்கு எண்ணிக்கை மையத்தில் வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட்டுள்ள அறையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராவில் தவறான நேரத்தை காட்டுவதால் சர்ச்சை எழுந்துள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் 17 லட்சத்து 56 ஆயிரத்து 109 பேர் வாக்களித்துள்ளனர்.மாவட்டத்தில் 88.52 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. மாவட்டத்தில் உள்ள 1983882 மொத்த வாக்காளர்களில் 227773 பேர் வாக்குகளை செலுத்தவில்லை,மாவட்டத்தில் 2822ஒட்டு சாவடியில் வைக்கப்பட்டிருந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் ஓட்டு பதிவு முடிந்த பின்னர் முகவர்கள் முன்னிலையில் இயந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு பாதுகாப்பாக வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையமான திருப்பூர் எல்ஆர்ஜி அரசினர் மகளிர் கல்லூரி வளாகத்தில் உள்ள ஸ்ட்ராங் ரூமில் அந்தந்த தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட அறையில் வைக்கப்பட்டு நான்கு அடுக்கு போலீஸ் பாதுகாப்புடன் உள்ளன.

இந்த வாக்கு எண்ணிக்கை மையத்தில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராவில் காலை 7 மணிக்கு பதிலாக காலை 5 மணி என தவறுதலாக நேரத்தை காட்டியது. இது குறித்து தேர்தல் பாதுகாப்பு பணிக்காக அனுமதியுடன் இருக்கக்கூடிய அரசியல் கட்சி ஏஜென்ட்கள் அதிகாரிகளிடம் கேட்டதற்கு சரியான விளக்கத்தை அவர்கள் தரவில்லை. இந்த குளறுபடிகள் திருப்பூர் தெற்குசட்டமன்றதொகுதிக்கு மட்டுமல்ல மாவட்டத்தில் உள்ள எட்டு சட்டமன்ற தொகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் இதேபோன்று தவறுதலான நேரத்தையே காட்டுவதால் இதில் ஏதோ குளறுபடிகள் இருப்பதாக குற்றச்சாட்டை அரசியல் கட்சியினர்கள் தெரிவிக்கின்றனர்.அரசியல் பகுப்பாய்வு இந்த வாக்கு எண்ணிக்கை மையத்தில் 200க்கும் அதிகமான சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வரும் நிலையில் அதிரடி படையினர், துணை ராணுவ படையினர், ஆயுத படையினர், மாநகர காவல் துறையினர்என4அடுக்கு பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை மையம் உள்ளது. மூன்றாவது கண் என சொல்லப்படும் கண்காணிப்பு கேமராவில் சரியான நேரம் காட்டப்படாததால்அரசியல் கட்சியினர்கள் இதில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளை சரி செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்து வெளியிட்டுள்ளவீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.


# திருக்கோவிலூர் அருகே கிணற்றில் மோட்டார் பழுதுபார்க்கும்போது விபத்து: தந்தை, மகன் உயிரிழந்த சோகம்!

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அடுத்த காட்டுப்பையூர் கிராமத்தில், கிணற்றில் தவறி விழுந்து தந்தை மற்றும் மகன் ஆகிய இருவரும் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

காட்டுப்பையூர் கிராமத்தைச் சேர்ந்த அய்யனார் (65) என்பவருக்குச் சொந்தமான 2 ஏக்கர் விவசாய நிலத்தில் உள்ள கிணற்றில்,நேற்று (24.04.2026) மாலை மின் மோட்டார் பழுது நீக்கும் பணியில் அவரும் அவரது மகன் வினு கணேஷ் (28) என்பவரும் ஈடுபட்டுள்ளனர்.

மோட்டாரை கிணற்றுக்குள் இறக்கிவிட்டு இயக்கிப் பார்த்தபோது தண்ணீர் வரவில்லை எனத் தெரிகிறது. இதனால் மீண்டும் மோட்டார் குழாயை மேலே இழுக்க முயன்றபோது, எதிர்பாராத விதமாக தந்தை மற்றும் மகன் ஆகிய இருவரும் சுமார் 30 கஜம் ஆழமுள்ள கிணற்றுக்குள் தவறி விழுந்தனர்.

அருகில் உள்ள நிலத்தின் உரிமையாளர் முத்துகிருஷ்ணன், மோட்டார் ஓடிக்கொண்டிருந்தும் ஆட்களைக் காணாததால்கிணற்றுப்பகுதியில் தேடிப் பார்த்துள்ளார். அப்போது இருவரும் கிணற்றுக்குள் விழுந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து அக்கம் பக்கத்தினருக்கும், தீயணைப்புத் துறையினருக்கும் தகவல் தகவல் அளித்திடும் பேரில்,



திருக்கோவிலூர் தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து, கிணற்றில் இருந்த இருவரது உடல்களையும் மீட்டனர். சம்பவம் குறித்து திருக்கோவிலூர் காவல் உதவி ஆய்வாளர் திரு. மணிகண்டன் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் உடற்கூறு ஆய்வுக்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் மகன்கிணற்றில்விழுந்து உயிரிழந்த சம்பவம் காட்டுப்பையூர்கிராமத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# அதிக வாக்குப்பதிவு எல்லாம் நடக்கவில்லை; அது ஒரு மாயத்தோற்றம்: திருமாவளவன் பேட்டி



சென்னை: தமிழக சட்டமன்றத் தேர்தலில் அதிக வாக்குப்பதிவு எல்லாம் நடக்கவில்லை என்றும், அப்படி தெரிவது ஒரு மாயத்தோற்றம எனவும் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியான முறையில் நிறைவடைந்து, வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பறைகளில் (Strong Rooms) வைக்கப்பட்டுள்ளன. இந்த அறைகளுக்கு வெளியே பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4ஆம் தேதி நடைபெற்று, அன்றைய தினம் மாலையே முடிவுகள் வெளியாகிவிடும்.

இந்நிலையில், சென்னை விமான நிலையத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களை சந்தித்தார்.

அவர் கூறுகையில், "சட்டமன்றத் தேர்தலில் வழக்கமான வாக்குப்பதிவுதான் பதிவாகியுள்ளது; இதில் வியப்படைவதற்கு ஒன்றும் கிடையாது. எஸ்ஐஆர் மூலமாக லட்சக்கணக்கான வாக்குகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன. அந்த வாக்குகள் நீக்கம் செய்யப்படாமல் இருந்து, இதே அளவு வாக்குப்பதிவு நடந்திருந்தால் அது பேசுபொருள் ஆகியிருக்காது.

ஆனால், எஸ்ஐஆர் மூலம் லட்சக்கணக்கில் வாக்குகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளதால், இப்போது கூடுதலான வாக்குகள் பதிவாகியிருப்பது போன்ற தோற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அது உண்மை இல்லை.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தலின் போது புதிய வாக்காளர்களாக 20 லட்சம் முதல் 25 லட்சம் வரை வாக்காளர்கள் இணைவார்கள். அதுபோல் இந்த தேர்தலிலும் 20 லட்சம் முதல் 25 லட்சம் பேர் வரையில் புதிய வாக்காளர்கள் சேர்ந்துள்ளனர். அவ்வளவு தான்.

இந்த சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் திமுக ஆட்சிதான் அமையும். மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மாபெரும் வெற்றியைப் பெறும். களத்தில் நேரடியாக மக்களைச் சந்தித்த அனுபவத்தில் இருந்து இதை நாங்கள் உணர்கிறோம். தேர்தலுக்கு பிறகு அரசியல் சூழல் மாறும் என்றுதான் நான் சொல்லியிருந்தேன்.

தேர்தல் முடிவுகளுக்கு பிறகு விஜய் வாங்குகின்ற வாக்கு சதவீதத்தைப் பொறுத்து தமிழ்நாடு அரசியல் சூழல் மாறும் என்கின்ற பொருளில் சொல்லியிருந்தேன். தேர்தல் முடிவுகள் வரட்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் பொருளாளர் பாலாஜி எம்எல்ஏ மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# வக்பு வாரியத்துக்கு முதன்மை செயல் அதிகாரியாக ஐஏஎஸ் அதிகாரியை நியமிக்கக்கோரி வழக்கு: தமிழக அரசு பதிலளிக்க உத்தரவு

சென்னை: தமிழ்நாடு வக்பு வாரியத்துக்கு இணைச் செயலாளர் அந்தஸ்தில் உள்ள ஐஏஎஸ் அதிகாரியை முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கில், தமிழக அரசும், வக்பு வாரியமும் 4 வார காலத்துக்குள் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இதுதொடர்பாக வக்பு வாரிய பாதுகாப்புக்குழு அறக்கட்டளை தலைவரான மதுரை கட்ராபாளையத்தைச் சேர்ந்த எம். அஜ்மல் கான் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், தமிழகம் முழுவதும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வக்பு வாரிய சொத்துக்களை கண்காணித்து பாது காக்கும் பொறுப்பும், கடமையும் முதன்மை செயல் அதிகாரிக்கே உள்ளது.

ஆனால் தமிழ்நாடு வக்பு வாரியத்தில் பணிபுரிந்த முன்னாள் முதன்மை செயல் அதிகாரிகள், கண்காணிப்பாளர்கள், இளநிலை உதவியாளர் உள்ளிட்ட பலர் தங்களுக்குள் கூட்டணி அமைத்து ரூ.2 ஆயிரம் கோடி மதிப்புள்ள வக்பு வாரிய சொத்துக்களுக்கு சட்டவிரோதமாக தடையில்லா சான்று வழங்கி அவற்றை விற்பனை செய்து மோசடியில் ஈடுபட்டுள்ளது தொடர்பாகவும், தவறு செய்த வக்பு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளேன்.

அந்த வழக்கில் தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க உயர் நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் வக்பு வாரிய திருத்தச் சட்டப்படி மாநில வக்பு வாரியத்துக்கு தமிழக அரசின் இணைச் செயலாளர் அந்தஸ்துக்கு குறையாத ஐஏஎஸ் அதிகாரியை நிரந்தர முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்க வேண்டும்.

ஆனால் தமிழக அரசு துணைச் செயலாளர் கிரேடு -2 அந்தஸ்தில் உள்ள சென்னை மாநகராட்சியில் அடையாறு மண்டல துணை ஆணையராக பணியாற்றிய ஐஏஎஸ் அதிகாரியான அப்தாப் ரசூல் என்ற அதிகாரியை வக்பு வாரியத்தின் முதன்மை செயல் அதிகாரியாக கடந்தாண்டு மே மாதம் நியமித்துள்ளது.

இது வக்பு வாரிய சட்டத்துக்கு எதிரானது என்பதால் அப்தாப் ரசூல் வக்பு வாரியத்தின் முதன்மை செயல் அதிகாரியாக பதவி வகிக்க தடை விதிக்க வேண்டும்.

அத்துடன் வக்பு வாரியத்துக்கு இணைச் செயலாளர் அந்தஸ்தில் உள்ள ஐஏஎஸ் அதிகாரியை முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும், எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் எம். ராமமூர்த்தி ஆஜராகி வாதிட்டார்.

அதையடுத்து நீதிபதி எந்த அடிப்படையில் ஐஏஎஸ் அதிகாரியான அப்தாப் ரசூல் வக்பு வாரியத்தின் முதன்மை செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான ஆவணங்களை 4 வார காலத்துக்குள் தாக்கல் செய்ய தமிழக அரசுக்கும், வக்பு வாரியத்துக்கும் உத்தரவிட்டு விசாரணையை தள்ளி வைத்து உள்ளார்.

# தேர்தல் பணியில் உள்ள 65 அலுவலர்களின் ரிட் மனு நிராகரிப்பு




புதுடெல்லி: மேற்கு வங்க தேர்தல் பணியில் ஈடுபட்ட 65 அலுவலர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன.

இதை எதிர்த்து தாக்கல் செய்த ரிட் மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது.

ரிட் மனுவை ஏற்க மறுத்த நீதிபதிகள் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தை அணுக அறிவுறுத்தினர்.

தற்போதைய தேர்தலில் அவர்கள் வாக்களிக்க முடியாது, இருப்பினும் எதிர்காலத்தில் அவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருப்பது உறுதி செய்யப்படும் என்று உத்தரவிட்டனர்.

# MrBeast under fire as exemployee sues company for workplace misconduct; what to know about the allegations



A former employee of MrBeast has sued his company in federal court, accusing the leadership of misconduct.

A former employee of Jimmy Donaldson (MrBeast) has sued his company in federal court, accusing the leadership of misconduct, the BBC reported. Lorrayne Mavromatis alleged there was sexual harassment, gender discrimination, and retaliation throughout her tenure of employment.

The case was filed in North Carolina and it alleges cases of unhealthy working environment and stress among employees, particularly, women. Donaldson is also mentioned in the suit but he is not a defendant.

The allegationsThe company has a toxic work culture, per the lawsuit. Female workers were allegedly not given importance in the male-dominated meetings of the company, Mavromatis claimed. She stated that inappropriate talks were usual, and that grievances about harassment went unattended. She asserted that bringing up issues resulted in adverse impacts. Rather than action, she encountered opposition. The complaint alleged that women who raised their voices faced retaliation. Mavromatis added that this working environment made it challenging to work freely and safely. In the lawsuit, Mavromatis described her experience during her pregnancy. She said that she was afraid of how the leadership would react to the news. She was the first woman to seek maternity leave allowances. This, according to her, contributed to the pressure.

Mavromatis said that she even worked when she was laboring. One of the Slack messages mentioned in reports was a request by one of the colleagues to talk about work ideas the same day when she was giving birth. She even mentioned later that her boss asked her whether she could participate in a team meeting at that time.

She claimed that she was asked to resume work soon after the pregnancy. Activities featured long hours and physically exhausting work. She also claimed that she was requested to go on a shoot soon after giving birth. Mavromatis claimed that she was dismissed some weeks after she had gone on leave. She was informed that her position was being cut.

The Time's Up Legal Defense Fund supports the lawsuit. One of the representatives has indicated that such cases are just a larger trend in workplaces that have poor accountability.

A spokesperson of Beast Industries dismissed all the claims. The company termed the accusations as false and misleading. It claimed that there is substantial evidence to deny the charges.

# தேர்தல் பணியின்போது உயிரிழந்த காவலர்கள்: டிஜிபி ஆழ்ந்த இரங்கல்

சென்னை: தேர்தல் பணியின்போது உயிரிழந்த காவல் துணைக் கண்காணிப்பாளர், சிறப்பு உதவி ஆய்வாளருக்கு தமிழக டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் இரங்கல் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாட்டில் (ஏப்ரல் 23) சட்டமன்ற தேர்தல் நடைபெற்றது. இந்நிலையில், தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த ராமநாதபுரம் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவின் டிஎஸ்பி ராமகிருஷ்ணன் (55), சேலம் மல்லியக்கரை சிறப்பு உதவி ஆய்வாளர் கண்ணதாசன் (59) ஆகியோருக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி இருவரும் உயிரிழந்தனர்.

பணியில் ஈடுபட்டிருந்தபோது காவலர்கள் மாரடைப்பால் உயிரிழந்த செய்தி, தமிழ்நாடு காவல்துறைக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளதாக தமிழக காவல்துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "கடந்த 1996ஆம் ஆண்டு சார்பு ஆய்வாளராக பணியில் சேர்ந்த ராமகிருஷ்ணன் (55), ராமநாதபுரம் மாவட்டத்தில் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவின் காவல்துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தார்.

அவர் கடந்த 23ஆம் தேதி மாலை ஒட்டன்சத்திரம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட காலாஞ்சிப்பட்டி அருகே உள்ள விவேகானந்தா பள்ளி பகுதியில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு மயங்கி விழுந்தார்.

உடனடியாக அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். கடந்த 30 ஆண்டுகளாக காவல்துறையில் அப்பணிப்போடு பணியாற்றிவந்த ராமகிருஷ்ணனுக்கு சந்தானபாமா என்ற மனைவியும், மூன்று மகள்களும் உள்ளனர்" என்று டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். தொடர்ந்து தனது அறிக்கையில், "கடந்த 1993ஆம் ஆண்டு இரண்டாம் நிலை காவலராக பணியில் சேர்ந்த கண்ணதாசன் (59), சிறப்பு உதவி ஆய்வாளராக, மல்லியகரை காவல் நிலையத்தில் பணியாற்றி வந்தார். தம்மம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கங்காவள்ளி சட்டமன்றத் தொகுதியில் மொபைல் குழு எண் 27இல் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டு, நாகியம்பட்டி கிராமத்தில் உள்ள வாக்குச்சாவடி எண் 221இல் தேர்தல் பணியாற்றிக் கொண்டிருந்தபோது 23.04.2026 அன்று மாலை திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு மயங்கி விழுந்தார்.

அவர் மின்னாம்பள்ளி தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக சேலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். 33 ஆண்டுகளாக காவல்துறையில் பணியாற்றி வந்த கண்ணதாசனுக்கு சிவகாமி என்ற மனைவியும், ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு காவல்துறையில் நேர்மை, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வந்த இரு அதிகாரிகளும் பொதுமக்களின் மரியாதையையும் சக அதிகாரிகளின் நம்பிக்கையையும் பெற்றிருந்தனர்.

தேர்தல் பணியில் கடமையாற்றிக் கொண்டிருந்தபோது உயிர்நீத்த இருவருக்கும், அவரவரது சொந்த ஊரில் நடைபெறவுள்ள இறுதி நிகழ்வில் காவல்துறை சார்பில் முழு காவல் மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அன்னாரகளை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு காவல்துறை தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது" என தனது டிஜிபி தெரிவித்தார்.

# ரயிலில் தொலைந்துபோன வைரம் பதித்த தங்க வளையல்: உடனடியாக மீட்ட ஆர்பிஎஃப் படையினர்



சென்னை: எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணி தொலைத்த ரூ. 3 லட்சம் மதிப்புடைய வைரக் கற்கள் பொறித்த தங்க வளையலை, ரயில்வே பாதுகாப்பு படையினர் மீட்டு உரியவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சென்னை பள்ளிக்கரணையை அடுத்த கோவிலம்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் சாரு பிரபா. இவர் தென்காசியில் இருந்து சென்னை எழும்பூர் வரும் பொதிகை எக்ஸ்பிரஸ் ரயிலில் B3 பெட்டியில் அமர்ந்து பயணம் செய்துள்ளார்.

ரயில் தாம்பரம் ரயில் நிலையத்திற்கு வந்துள்ளது. அப்போது சாரு பிரபா தனது உடைமைகளுடன் ரயிலில் இருந்து கீழே இறங்கியுள்ளார்.

அப்போது அவர், தனது கையில் இருந்த சுமார் 10 கிராம் எடையுள்ள வைர கற்கள் பதிக்கப்பட்ட தங்கவளையல் மாயமானதை கண்டு அதிர்ச்சியடைந்தார். அதற்குள்ளாக, ரயில் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திற்கு புறப்பட்டு சென்று விட்டது.

இதையடுத்து, சாரு பிரபா உடனடியாக தாம்பரம் ரயில்வே பாதுகாப்பு படை போலீசாரிடம் இதுகுறித்து தகவல் தெரிவித்தார். மேலும், அடுத்து வந்த மின்சார ரயிலை பிடித்து சென்னை எழும்பூர் ரயில் நிலையத்திற்கு சென்று அங்குள்ள ரயில்வே பாதுகாப்பு படை காவல் நிலையத்திலும் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில், ரயில்வே பாதுகாப்பு படை போலீசார், பொதிகை எக்ஸ்பிரஸ் ரயிலில் சாரு பிரபா பயணித்த பெட்டியில் சோதனை செய்தனர். அப்போது ஒரு இருக்கைக்கு கீழே வைர கற்கள் பதித்த 10 கிராம் தங்க வளையல் கிடைத்துள்ளது.

அதனை கைப்பற்றிய போலீசார், சாரு பிரபாவை எழும்பூர் ரயில்வே பாதுகாப்பு படை காவல் நிலையத்திற்கு அழைத்து உரிய அடையாளங்களை சோதித்து பார்த்து உறுதி செய்த பின்னர், அதனை சாரு பிரபாவிடம் ஒப்படைத்தனர். மேலும், இனி ரயில் பயணத்தின் போது விலை உயர்ந்த உடைமைகளை கவனத்துடன் பார்த்துக் கொள்ளுமாறும் போலீசார் அவருக்கு அறிவுரை வழங்கினர்.

ரயிலில் தவறவிட்ட சுமார் ரூ.3 லட்சம் மதிப்பிலான தங்க வளையலை, ரயில்வே பாதுகாப்பு படையினர் உடனடியாக மீட்டு உரியவரிடம் ஒப்படைத்த சம்பவம் அனைவரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.